# கற்றிலனாயினும் கேட்க!

**வளர்நிலை - 8**

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றார் பொய்யாமொழிப் புலவர். பொருளின் சிறப்பு இதனால் நன்கு புலனாகும். இப்பொருள் செல்வப் பொருள், கல்விப் பொருள் என இரண்டாகும். செல்வப் பொருளினும் கல்விப் பொருளே சிறந்தது என்பது அறிவுடையார் அனைவரும் அறிந்ததே.

“கல்வியே கருந்தனம்” என்பர். “**கல்வி வெள்ளத்தே போகாது வெந்தணலால் வேகாது; கொள்ளத்தான் முடியாது. பிறர்க்குக் கொடுத்தாலும் குறையாது. மேலும் மேலும் நிறையும்**” என்றெல்லொம் சான்றோர் கூறியுள்ளனர். ஆகவே **‘இளமையில் கல்’** என்னும் அறிவுரை ஔவையார் வாக்கிலிருந்து எழுந்தது.

‘கல்வி’யை நிரம்பப் பெறுவதற்கு வாய்ப்புகள் பல, அமைத்திட வேண்டும். தக்க பருவம், தக்க காலம், தக்க பொருள், தக்க சூழ்நிலை, தக்க ஆசான் - அனைத்தும் வாய்த்தால் தான், தனிச் சிறப்பான கல்வி பெறமுடியும். ஆகவே தான், எல்லாரும் கற்று, இணையற்றபேறு எய்த முடியாது போகிறது. இதனை நன்கு அறிந்த பெருமக்கள் - ‘**கற்றலன் ஆயினும் கேட்க**’ என்று கூறியுள்ளனர்.

ஒருவர் பல காலம் முயன்று பெரும்பொருள் செலவிட்டுப் பெற்ற கல்வி அறிவைச் சிறுபொழுதில் எளிய முயற்சியில் பெறுதற்குக் கொள்ள கேள்வியால் முடிகிறது.

எளிய முயற்சியால் அரிய புதையலைப் பெறமுடியும் ஆயின், எவர்தாம் விரும்பார்? அம் முறையால் கேள்வியின் சிறப்பு கற்றலில் கூட உயர்கின்றது எனலாம்.

முதுமைத் தளர்ச்சி அடைந்தார்க்கு மட்டுமன்றி, இளையர்க்குக் கூட வழுக்கல் நிலத்தில் நடக்கும்போது, கால் தள்ளாடுவது உண்டு. அந்நிலையில் ஊன்றுகோல் இருந்தால் எவ்வளவோ உதவியாகும். அது போல் உலக வாழ்வாம் வழுக்கல் நிலத்தில் நடக்க உறுதுணையாக இருக்கும் ஊன்றுகோல் போன்றது கேள்வி, என்பது சான்றோர் கருத்து.

**“கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு**

**ஒற்கத்தின் ஊற்றாந் துணை”**

என்பது வள்ளுவம்.

கேள்வியால் எய்தும் பயன் பெரிது. பன்னூல் அறிவையும் ஓரிடத்தே ஒரு பொழுதே அறிய முடிகிறது. ஆதலால் உலகியல் பேரறிவு வாய்க்கின்றது. கிணற்றுத் தவளையாக ஒடுங்கும் ஒருநிலை ஒழிந்து உலகாக விரியும் உயர்நிலை எய்துகின்றது.

**“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**

**செல்வத்துள் எல்லாம் தலை”**

என்று திருக்குறளும் உறுதியாகக் கூறுகின்றது.

நன்றி, வணக்கம்!